# இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை

## 2024 கல்வி ஆண்டிற்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல்

இலங்கையின் சட்டக் கல்லூரியின் 2024 கல்வி ஆண்டிற்கான மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தகைமைவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு முன்னர் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையதளத்தின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (Instructions) ஐ தரவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப் படிவத்தை நிரப்பும் போது அவ் அறிவுறுத்தலை முழுமையாக பின்பற்றவும். பரிபூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

<u>**நுழைவுத் தகைமைகள்**</u>

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல்

02. விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் வேளையில் 17 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (அதன்படி 2006-08-16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்த தினத்தை கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.)

03. (அ). இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் அல்லது

    (ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கல்விப் பொதுத் தராதர பத்திர (உயர்தரப்) பரீட்சையில் அல்லது

    (இ) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பரிந்துரை செய்யப்படும் மேற்படி (அ) மற்றும் (ஆ) உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்தர மட்டத்தின் தகைமையொன்றாகக் கருதப்படுகின்ற அளவுகோல்களுக்கு உட்படும் ஏதேனுமொரு பரீட்சையில், ஒரேதடவையில் திறமைச் சித்திகள் இரண்டினையும் மற்றும் சாதாரண சித்தியொன்றையும் பெற்றிருத்தல்.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பெறுபேறுக்குப் பதிலாக கருத்திற்கொள்ளப்படும் ஏனைய தகைமையுடன் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பப்படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் 070 - 6759892 எனும் இலக்கத்தை தொடர்புகொண்டு தகவல் பெற்றுக் கொள்ளவும்)

04. இலங்கை கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சை/தேசிய பொதுச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் மேற்படி பரீட்சைகளுக்கு சமமானது என ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சையொன்றில், ஆங்கில மொழியில் திறமைச் சித்தியொன்றையும் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியை பெற்றிருத்தல் வேண்டும்.

## நுழைவுப் பரீட்சை

சகல விண்ணப்பதாரர்களும் 2023 செப்டம்பர் மாதத்தில் நடாத்தப்படும் நுழைவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சைக்கு உள்ளடக்கப்படும் வினாப்பத்திரங்கள் பின்வருமாறு,

- மொழித் திறன் – காலம் 03 மணித்தியாலம்
- பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை – காலம் 03 மணித்தியாலம்
  (இவ்வினாப்பத்திரம் 1 ½ மணித்தியாலத்தை கொண்ட இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது.)

விண்ணப்பதாரர்களுக்கு பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சைக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தோற்ற முடியும். விண்ணப்பதாரர் இதற்காக சிங்களம் அல்லது தமிழ் மொழியை தெரிவு செய்வாராயின் மொழித்திறன் வினாப்பத்திரத்திற்கு ஆங்கில மொழியை தெரிவு செய்தல் வேண்டும்.

பொது அறிவு மற்றும் நுண்ணறிவு வினாப்பத்திரத்திற்கு ஆங்கில மொழியில் தோற்றுவதாக இருந்தால், மொழித்திறன் வினாப்பத்திரத்திற்கு சிங்களம் அல்லது தமிழ் மொழியை தெரிவு செய்தல் வேண்டும்.

அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் மீண்டும் மொழியை மாற்றம் செய்ய எவ்வகையிலும் முடியாது.

கடந்தகால வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்வதற்கு (http://www.sllc.ac.lk/sub_pgs/papers.html) இணையதளத்தில் பிரவேசியுங்கள்.

## பரீட்சைக் கட்டணம்

(அ) கவனிக்கவும்: விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை முறையில் மாத்திரமே அனுப்ப வேண்டும்.

(அ) பரீட்சைக் கட்டணம் 1200/= ரூபாவாகும். பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை ஒழுங்கில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரமே செலுத்துகை செய்யப்படுதல் வேண்டும்.

1. எந்தவொரு வங்கிக் கடனட்டையின் மூலமும் (Any Bank Credit Card)
2. இணையதள செலுத்துகை வசதிகளுடன் கூடிய எந்தவொரு வங்கி அட்டையின் மூலமும் ((Any Bank Debit Card With the Facility of Internet Transactions)
3. இலங்கை வங்கியின் ஒன்லைன் வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
4. எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் (Any Baranch of the Bank of Ceylon)

- மேற்படி முறையின் மூலம் செலுத்துகை செய்யப்படும் முறை குறித்த அறிவுறுத்தல்கள் பரீட்சை திணைக்கள இணையதளத்தில் பரீட்சையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுறுத்தலின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

- செலுத்துகை கிடைக்கப்பெற்றுள்ளதாக குறுந்தகவல் (SMS) ஒன்றின் மூலம் அல்லது மின்னஞ்சல் தகவலொன்றின் மூலம் அல்லது அறிவிப்புச் செய்யப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கு முழுமையான தொகையும் செலுத்துகை செய்யப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட செலுத்துகை முறைகளினூடாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது ஏற்படுகின்ற கோளாறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்புச் சொல்ல மாட்டாது.

சட்டக் கல்லூரிக்கான கட்டணம் 15,000/= ரூபாவாகும். இப் பணத்தை ஹெட்டன் நெஷனல் வங்கியின் கூட்டிணைக்கப்பட்ட சட்டக் கல்வி மன்றம் எனும் பெயரில் உள்ள 063020073300 (புதுக்கடை கிளை) கணக்கிற்கு 2023 ஆகஸ்ட் மாதம் 16 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பதாரரின் பெயரில் செலுத்துதல் வேண்டும். உரிய பற்றுச்சீட்டினை entrance@sllc.ac.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பியதன் பிறகு மாத்திரமே தனது விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை ஒழுங்கில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். சட்டக் கல்லூரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் பற்றுச்சீட்டில் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவரின் முதலெழுத்துக்களுடனான பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை கட்டாயமாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். (மேற்படி கட்டணத்தை உரிய முறையில் செலுத்தாதிருத்தல்/வேறு ஒருவரின் பெயரில் செலுத்துகை செய்திருத்தல்/விண்ணப்பதாரர் அல்லாத வேறு ஒருவரின் தகவல்கள் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருத்தல் போன்ற விடயங்களின் நிமித்தம் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். மேலும், விண்ணப்பதாரர்களினால் தங்களது பற்றுச்சீட்டுக்களை தமதுடமையில் வைத்திருத்தல் பிரயோஜமானதாகும்.

**<u>பரீட்சை நுழைவுச்சீட்டு</u>**

(1) விண்ணப்பப்படிவம் அனுப்பிவைக்கப்படும் இறுதித் திகதியின் பின்னர் நிகழ்நிலை முறையினூடாக அனுப்பப்பட்டுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களினதும் தகவல்களை (Submitted Applicants Details) உள்ளடக்கிய மென்பொருள் பிரதியொன்றை இலங்கை சட்டக் கல்லூரிக்கு பரீட்சைத் திணைக்களத்தின் மூலமாக அனுப்பி வைக்கப்படும். சட்டக் கல்லூரியின் மூலம் அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் பரீட்சைக்கான நுழைவுச் சீட்டு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்யும் அதிகாரம் இலங்கை சட்டக் கல்லூரிக்கு உள்ளது.

(2) பரீட்சை நுழைவுச் சீட்டுக்கள் ஒன்லைன் முறையில் மாத்திரமே வெளியிடப்படும். உரிய நுழைவுச்சீட்டு வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் பத்திரிகை அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். நுழைவுச் சீட்டினை பெறாத விண்ணப்பதாரர் ஒருவர் இருப்பின் அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவாகம், பரீட்சை ஏற்பாட்டுக் கிளையில் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியான முறையில் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியில் வசிக்கும் ஒருவராயின் பெக்ஸ் மூலம் பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியொன்றை பெற்றுக்கொள்ள முடியும். தனது பெக்ஸ் இலக்கத்தை குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை பரீட்சை திணைக்களத்தின் மூலமாக வெளியிடப்படும் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

(3) பரீட்சைக்கு தோற்றும் பரீட்சாத்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் எதேனும் ஆவணமொன்று பொறுப்பேற்கப்படும்.

01. தேசிய அடையாள அட்டை

02. செல்லுபடியான கடவுச்சீட்டு

03. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேலும் பரீட்சாத்திகள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள்ளும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைதல் வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளாத பரீட்சாத்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த நிமிடம் முதல் பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் கண்டுகொள்ளக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகளை மூடாமல் இருத்தல் வேண்டும்.

(4) பரீட்சாத்தி ஒருவருக்கு பரீட்சை நுழைவுச்சீட்டை பிரசுரித்தல், அவர் அல்லது அவள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான ஏற்றுக்கொள்ளலாக கருதப்பட மாட்டாது.

(5) பரீட்சைக்கு தோற்றுவதற்காக தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட நுழைவுச் சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு பரீட்சாத்திகள் உட்படுதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

## <u>விண்ணப்பப்படிவத்தை நிராகரித்தல்.</u>

பின்வரும் விடயங்களின் நிமித்தம் உங்களது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட முடியும். அதனால் விண்ணப்பப்படிவத்தை அனுப்புவதற்கு முன்னர் இது தொடர்பில் சரியான முறையில் அவதானத்தை செலுத்தவும்.

01. முழுமையற்ற பிழையான விண்ணப்பங்கள்.
02. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.
03. சரியான முறையில் பணம் வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டை மின்னஞ்சல் மூலம் சட்டக் கல்லூரிக்கு அனுப்பி வைக்காமை.
04. சட்டக் கல்லூரியினால் வேண்டுகின்ற சந்தர்ப்பத்தில் கல்விச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறுதல்.
05. விண்ணப்பப் படிவத்தை அனுப்புகின்ற சந்தர்ப்பத்தில் கல்வித் தகைமைகள்/ஏனைய தகைமைகளை பூர்த்தி செய்யாதிருத்தல்.

## <u>குறிப்பு</u>

- பரீட்சைக்கு செலுத்திய பணத்தை எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அவ்வாறே உங்களால் செலுத்தப்பட்டுள்ள சட்டக் கல்லூரிக் கட்டணத்தையும் மீளக் கோர முடியாது.

- பொய்யான தகவல்களை சமர்ப்பித்தலுக்கான தண்டனை: நிகழ்நிலை ஒழுங்கில் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்கின்ற போது மிகவும் கவனமான முறையில் சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். அவ்வாறே நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை அனுப்புகின்ற போதும் நிகழ்நிலை ஒழுங்கமைப்பில் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்கள், நிபந்தனைகள், சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்பட்டு நடத்தல் வேண்டும். அவ்வாறு உட்பட்டு நடக்காமை வெளிப்படும் சந்தர்ப்பத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய/அவளுடைய அபேட்சத்துவத்தை இரத்துச் செய்ய முடியும்.

**<u>விண்ணப்பிக்கும் முறை</u>**

2023 ஜுலை மாதம் 16 ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 2023 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரையில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையதளத்தின் மூலம் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். “Our Services” இன் கீழுள்ள “Online Applications – Recruitment Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை முறையில் (Online) சமர்த்தில் வேண்டும்.

அதிபர்,
இலங்கை சட்டக் கல்லூரி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.